**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண்.938/2023**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பொன்னுச்சாமி | தொழில் |
| த/பெ | ராமசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பில் 2வது சாட்சி ஆவேன். என் முதல் விசாரணை நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். நான் **4–ம்** வகுப்பு வரை படித்துள்ளேன். வாதியின் அப்பாவுக்கு திருவனந்தபுரம் மருத்துவமனையில் தான் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று சொன்னதால் திருவனந்தபுரம் அழைத்துச் சென்றேன். வாதி செல்வகுமார் சொன்னதால் திருவனந்தபுரம் கூட்டிச் சென்றேன். வாதியின் அப்பாவுக்கு அவரது தலையில் கட்டி இருப்பதாக திருவனந்தபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் சொன்னார். நான் வாதியின் அப்பாவுடன் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் தங்கி இருந்தேன். **2014, 2015, 2020** ஆம் ஆண்டுகளில் நான் வாதியின் அப்பாவுடன் இருந்தேன் நான் தான் காரில் கை தாங்கலாக ஏற்றி அனுப்பி வைத்தேன். உயிலில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது ஆனால் உயில் எழுதப்பட்டது உண்மை. **1–ம்** பிரதிவாதியை அவருடைய அப்பாவுடன் தகராறு செய்ய வேண்டாம் என்று அறிவுரை சொன்னோம். தலைவலிக்காகத்தான் அவரை திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். பின்னிட்டு அவர் மனநிலை பாதிக்கப்பட்டதற்கும் ஒரு மாதம் சிகிச்சை எடுத்துக் கொண்டார். அவருக்கு தலைவலி இருந்திருந்தால் கண்ணாடி அணிந்து இருப்பார் என்றாலும் அவர் மனநிலை பாதிக்கப்பட்டதற்கு எப்போதும் சிகிச்சை எடுத்துக் கொண்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் தந்தை மனநிலை

சரியில்லாமல் எப்போதும் இருந்ததில்லை என்றாலும் அவர் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. 1–ம் பிரதிவாதி அனைவரிடமும் சண்டையிடும் பழக்கம் கொண்டவன் என்று நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் இன்று நான் சாட்சியாக சாட்சியமளிக்க 1–ம் பிரதிவாதி விடமாட்டேன் என்று சத்தம் போட்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. இன்று காலை கன்னிவாடியில் பேருந்து நிறுத்தத்தில் நான் வந்தபோது 1–ம் பிரதிவாதி அங்கு இருந்து தன்னுடைய அண்ணனுக்கு ஆதரவாக சாட்சியமளித்தால் அடிப்பேன் குத்துவேன் என்று சொன்னார். 1–ம் பிரதிவாதி வந்தவுடன் பேருந்து வந்துவிட்டது என்றாலும் அவர் யாரிடமும் பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு வாதி தான் பணம் கொடுத்தார். திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்வது குறித்து 1–ம் பிரதிவாதிக்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் 1–ம் பிரதிவாதி அப்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. திருவனந்தபுரத்துக்கு காலை 8 மணிக்கு எங்கள் ஊரில் இருந்து கிளம்பினோம் மாலை 6 மணிக்கு சென்றடைந்தோம். வாதியின் தந்தையாருக்கு ஆங்கிலத்தில் உள்ள பெயர் பலகைகளை படிக்க தெரியும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் படிக்கத் தெரியாது. உயில் எழுதுவதற்கு வாதியின் தந்தையை வாடகை காரில் ஏற்றி அனுப்பினேன்.

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.04 19:05:29 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.